ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: திரு. தா.முஹம்மது குதுரத்துல்லா

ந.க.31104/2019/அ5 நாள்: 10.04.2024.

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஈரோடு மாவட்ட வருவாய் அலகு - பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் சக்திவேல் (திரு) கு. என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

B1

வட்டாட்சியர் அலுவலகம்
15 APR 2024
பெருந்துறை

பார்வை:
1. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.31104/2019/அ5 நாள்.29.07.2022.
2. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023.
3. அரசுக் கடித எண்.5532/ஜி2/2023, மனிதவள மேலாண்மைத் துறை நாள்:20.09.2023.
4. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆ.கு.3/4600/2024 நாள்:28.02.2024.

ஒஒஒஒஒஒ

**ஆணை:**

ஈரோடு மாவட்ட வருவாய் அலகில் பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை வருவாய் ஆய்வாளராகப் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.கு.சக்திவேல் என்பவர் பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் 01.08.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 2-ல் காணும் அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023 மற்றும் அரசுக் கடித எண்.5532/ஜி2/2023 நாள்:20.09.2023-ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை பணிநியமன அலுவலரே பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் பேரிலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)-ன்படியும் தனியர் திரு.கு.சக்திவேல் என்பவரது பணியினை பணியேற்ற நாளான 01.08.2022 முற்பகல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழே அவருக்கெதிரே கலம்-04-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.கு.சக்திவேல்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>பெருந்துறை. | 01.08.2022 முற்பகல் | 01.08.2022 முற்பகல் |

மேலும், தனியருக்கு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவுசெய்து அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பெருந்துறை வருவாய் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓம்./-தா.முஹம்மது குதுரத்துல்லா,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
ஈரோடு.

//உண்மைநகல்/உத்தரவுப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:-
திரு. கு. சக்திவேல்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெருந்துறை.

12.4.2024

நகல் : வருவாய் வட்டாட்சியர், பெருந்துறை.

நகல்: கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : "அ5" - இருப்புக் கோப்பிற்கு.